**.மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**அசல் வழக்கு எண். 47/2016**

DW3 – ஆதிராஜன் த/பெ. ஆதிமூலம்
நாள்–13.03.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியில் தான் எங்கள் வீட்டிற்கான மின்இணைப்பு , எரிவாயு அடுப்பு இணைப்பு மற்றும் தொலைபேசி இணைப்பு உள்ளது என்றால் சரிதான். எத்தனை மின் இணைப்பு உள்ளது என்றால் தெரியவில்லை. எங்கள் தொலைபேசி இணைப்பு எண் 277144 என்றால் சரிதான். நாங்கள் வசித்து வரும் முகவரியானது நல்ல விநாயகபுரம் ஊராட்சி, 3 வது வார்டுக்கு உட்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் தான் நான் பிறந்து வளர்ந்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்ய இயலுமா என்றால் முடியும்.

எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் எனது தகப்பனார் எந்த வருடம் முதல் எந்த வருடம் வரை ரைஸ் மில்லில் டிரைவராக பணிபுரிந்தார் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ஷேக் தாவூத்திற்கு எத்தனை மனைவிகள் என்றால் 3 மனைவிகள். அவர்களின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. திருச்சியில் வசித்து வரும் ஒரு மனைவி தற்போதும் உயிருடன் உள்ளாரா என்றால் உள்ளார். நான் அவரை கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு பார்த்தேன்.

ஷேக் தாவூத்திற்கு எத்தனை சகோதரர்கள் என்றும், அவர்கள் பெயரும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவர்கள் உயிருடன் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். எங்கு வசித்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது.

ஆனால் கொள்ளிடத்தில் ஒருவர் வசித்து வருகிறார். அவர் பெயர் தெரியாது. தாவா சொத்து எனது தகப்பனாருக்கு அனுபவம் மூலம் பாத்தியம் ஏற்பட்டுவிட்டதாக வழக்கு நடத்துகிறாரா என்றால் ஆமாம். பி.சா.ஆ.7–ன் படி நாங்கள் வீடு கட்டப்படவில்லை என்றால் சரிதான். வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை நாங்கள் ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு காலி செய்ய மறுத்து வருகிறோம் என்றும், அதனால் தான் வாதி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதிகள் கோரியுள்ளவாறு இவ்வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.